16.02.2024

O.S.No.101/2020

வா.சா.1.திரு.சுப்பிரமணி த.பெ.ராமசாமி பிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் தற்போது மதுரை தத்தனேரியில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள் உண்டு, என்னை எனது மூத்த மகன் பராமரித்து வருகிறார். எனது சொத்தையும் சேர்த்து எனது சகோதரர் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டதால் எனது சொத்தைக் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் மதுரை மாநகராட்சியில் அரசு பணியாளராக இருந்து 1995ம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளேன். எந்த ஆண்டு நான் பணியில் சேர்ந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தந்தையின் தந்தை பெயர் சிவக்கொழுந்து பிள்ளை ஆகும். நானும், எனது மகன்களும் மதுரையில் குடியிருந்து வருவதால் எட்டிமங்கலத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளதா என்றால் ஒருகுடிசை வீடு உள்ளது. அந்த குடிசை வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றால் நான் அவ்வப்போது வந்து செல்வேன். அந்த குடிசை வீட்டுக்கு மின் இ ணைப்பு கிடையாது. அந்த குடிசை வீடு கட்டி சுமார் 2 ஆண்டுகள் இருக்கும்.

2. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்புதான் நான் அந்த குடிசை வீட்டினை கட்டினேன் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு கடந்த 2 ஆண்டு காலமாக வரி ரசிது செலுத்தி வருகிறேன். எனது தாத்தா சிவக்கொழுந்து பிள்ளைக்கு எனது தந்தை ராமசாமி பிள்ளையும், அவருடன் பிறந்த சாமிநாத பிள்ளையும் இரண்டு மகன்கள் ஆவார்கள் என்றால் சரிதான். தாவாசொத்து தவிர எனது தாத்தாவிற்கு வேறு சொத்துக்கள் உள்ளனவா என்றால் உள்ளன. தாவாசொத்தை தவிர இதர சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பத்திரம் எழுதி பாகபிரிவினை செய்து கொண்டோம். அவ்வாறு எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து எனது பெயரிலும் 1ம் பிரதிவாதியான எனது சகோதரர் பெயரிலும் கூட்டுபட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மொத்தம் 15 செண்டு விஸ்தீரணம் உடையது என்றால் சரதான், அந்த சொத்து எனது தாத்தா சிவக்கொழுந்து பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்று நான் தாவா செய்கிறேன் என்றால் சரிதான்.

3. எனது தாத்தா சிவக்கொழுந்து பிள்ளைக்கு எனது தந்தைராமசாமி பிள்ளையும், சாமிநாத பிள்ளையும் மகன்கள் என்றாலும், சாமிநாத பிள்ளைக்கு சிவக்கொழுந்து மற்றும் முத்துசாமி என்ற இரண்டு மகன்கள் உள்ளனர் என்றாலும, எனது தந்தைக்கு நானும் 1ம்பிரதிவாதியும் இரண்டு மகன்கள் என்றாலும் சரிதான், எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தால் சாமிநாத பிள்ளை மக்கள் இருவர் மற்றும் ராமசாமி பிள்ளையின் மக்களான எனது பெயர் மற்றும் 1ம் பிரதிவாதி பெயரிலும் சேர்த்து கூட்டாகதான் காணப்பட்டிருக்கும் என்றாலும் சாமிநாதன் மகன் முத்துசாமி பெயரிலும் எனது சகோதரர் 1ம் பிரதிவாதி பெயரிலும், கூட்டுப்பட்டாவாக இருபபதற்கு என்ன காரணம் என்றால் அவர்கள் இருவரும் தங்களது பெயரில் யுடிஆரில் மாற்றிக்கொண்டார்கள். அந்த பட்டா

யுடிஆர் பட்டா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த பட்டா 1980ம் ஆண்டுகளிலேயே முத்துசாமி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக வழங்கப்பட்ட விவரம் இதததனை ஆண்டுகாலமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மதுரை மாநகராட்சியில் வேலை பார்த்து அங்கேயே இருந்தததால் எட்டிமங்கலத்தில் உள்ள தாவா சொத்தை பற்றி எனக்கு முழு விவரமும் தெரியாது என்றால் சரியல்ல, நான் அவ்வப்போது எட்டிமங்கலம் வந்து செல்வேன், தாவாசொத்தை பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்து பாகம் பிரிக்காமல் இருந்தது.

4. தாவா சொத்து எனது தாத்தா சிவக்கொழுந்து பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்பதனை காண்பிப்பதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் உள்ளனவா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனது தாத்தா சிவக்கொழுந்து பிள்ளை வீடு எதுவும் கட்டவில்லை, முன்பு நெல் பயிரிட்டு, விவசாயம் பார்த்தார்கள். தாவா சொத்து புஞ்சை என்றுதான் உள்ளது என்றாலும், நஞ்சையாக காணப்படாததால் நெல் பயிரிட்டதாக சொல்வது இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பகுதி இடமான சாமிநாத பிள்ளைக்கு பாத்தியப்பட்ட 7-1/2 செண்டுநிலத்தில் அவரது மக்கள் இருவரும் பிரித்துக்கொண்டார்களா என்றால் பிரித்துக்கொண்டார்கள், ஆனால் சாமிநாதபிள்ளையின் மகன்களில் ஒருவரான முத்துசாமி பெயரிலும், எனது சகோதரர் பெயரிலும் தான் தாவா சொத்திற்கான கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது போல் அவர்கள் இருவரும் பாகம் பிரித்திருந்தால் அவர்களது பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதாக இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ-1 ஆவணம் எங்களுக்கிடையே ஏற்பட்ட பாகபிரிவினையை காண்பிக்கக்கூடிய ஆவணம் கிராம நிர்வாக அலுவலரே இருந்து இந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தார். மற்ற சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டு எந்த ஆவணமும் எழுதவில்லை. வா.சா.ஆ-1 ஆவணம் தவிர வேறு எந்த ஆவணமும் நாங்கள் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தினை தவிர மற்ற சொத்துக்களை பொறுத்து ஏன் எழுதி பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் எங்களுக்குள் பிரித்துக்கொள்ளவில்லை, தாவா சொத்தை பொறுத்து மட்டும் தான் நாங்கள் பிரித்துக்கொண்டோம். எனது சகோதரர் பாகம் பிரிப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்பதால் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் வா.சா.ஆ-1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து குறித்து நாங்கள் பிரித்துக்கொண்டோம். வா.சா.ஆ-1 ஆவணம் எழுதவற்கு முன்பு எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே எந்த தகராறும் இல்லை.

6. வா.சா.ஆ-9 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள தாவா சர்வே எண்ணில் பட்டா எண்.240 சிவக்கொழுந்து, முத்துசாமி, மீனாள் ஆகியோர்களது பெயரில் ஏற்பட்டுள்ளதாக காணப்படுவதால் அதில் கண்டுள்ள மீனாள் யார் என்றால் எனது மற்றொரு பாட்டனாரின் வாரிசு ஆவார், அவருக்கும் இந்த சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. தாவா சொத்தில் நான் குடிசை அமைத்தது குறித்து எனது சகோதரர் எனக்கெதிராக மேலவளவு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் எனது இடத்தில்தான் நான் குடிசை அமைத்தேன். வா.சா.ஆ-1 ஆவணம் நான் கூறுவது

போல் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் எழுதப்பட்ட ஆவணம் அல்ல என்றாலும், அந்த ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அந்த ஆவணம் இந்த வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல, ஊர் முன்னிலையில் பாகம் பிரித்து எழுதிக்கொண்ட ஆவணம்தான் அந்த ஆவணம், அதன் ஒரு பிரதி 1ம் பிரதிவாதிக்கும் அப்போதே வழங்கப்பட்டது.

7.தாவாசொத்திற்கான பட்டா எனது சகோதரர் 1ம் பிரதிவாதி பெயரிலும் முத்துசாமி பெயரிலும் கூட்டாக இருப்பதால் அவர்களது அனுபவத்தை குறித்து அரசாங்கத்தால் வழஙகப்பட்ட யுடிஆர் பட்டா என்பதால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையோ, பாத்தியதையோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து அனுபவம் குறித்தோ, பாத்தியதை குறித்தோ எனது தாத்தா சிவக்கொழுந்து பிள்ளை பெயரிலோ, எனது பெயரிலோ எந்த ஆவணங்களும் இல்லாத பட்சத்தில் பொய்யான சங்கதிகளை கொண்டு நான் இந்த வழககினை தாக்கல் செய்து வீண் தாவா செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எட்டிமங்கலம்கிராமத்தில் உள்ள எனது உறவினர்களின் தூண்டுதலின் பேரில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.